1980 ஜூலை 23]

கிரியாறு அணைத் திட்டம்

கு. கா. வி. எண் 38—திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு நீர்ப் பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கிரியாறு அணைத் திட்டம் அரசு பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், இந்தத் திட்டம் எப்பொழுது முதல் செயலுக்கு வரும்.

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது: (அ) மற்றும் (ஆ): இத் திட்டத்திற்கு கேரளத்தில் மேற்கு நோக்கிப் பாயும் கிரியாற்றிலிருந்து தண்ணீரை திசை திருப்பிக்கொண்டு வர வேண்டியிருப்பதால், மத்திய அரசால் அமைக்கப்பட்ட வல்லுநர் குழுவின் அறிக்கை சமர்ப்பிக்கப்பட்ட பின் இத் திட்டம் பற்றி ஆராயப்படும்.

திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிரியாறு சிவகிரிக்கு மேற்காக மேற்குத் தொடர்ச்சி மலையில், மேற்குச் சரிவில் உற்பத்தியாகி வடமேற்குமுகமாக ஓடி பம்பையாற்றுடன் கலந்து அரபிக் கடலில் விழுகிறது. பொதுப்பணித் துறையினர் இந்நதியின் குறுக்காக சுமார் 3,420 அடி மட்டத்தில் 13.2 சதுர மைல் நீர்ப்பிடிப்புள்ள இடத்தில் ஓர் அணை கட்டி, 22 மைல் நீளம் சுரங்கக் கால்வாய் அமைத்து, 410 மில்லியன் கன அடி தண்ணீரை சங்கரன்கோவில் வட்டத்தில் உள்ள வாழமலையாறு, கோட்டைமலையாறுகளுடன் சேர்ந்து, சுமார் 10,000 ஏக்கர் பாசன வசதி அடையும் . . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஆறு என்று ஆரம்பித்து, அரபிக்கடல் வரை போய்க் கொண்டிருந்தால் எங்கே போய் முடிவது? கேள்வி கிரியாறு அணைத் திட்டம் பற்றியது. அதைப்பற்றிய வரலாற்றை எல்லாம் சொல்ல ஆரம்பித்தால் என்ன செய்வது? இது குறுகிய கால வினா, சீக்கிரம் தெரிந்து கொள்ள வேண்டுமென்று கொடுக்கப்பட்டு, வந்திருக்கிறது. எனவே, சுருக்க மாகக் கேள்வியைக் கேளுங்கள்.

திரு. இரா. தாமரைக்கனி: ஆகவே, அரசு மீண்டும் பரிசீலனை செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது: பேரவைத் தலைவரவர்களே, தமிழக அரசினுடைய பரிசீலனை என்பது இங்கே பிரச்னை அல்ல. மேற்கு நோக்கிப் பாயும் நதி என்கின்ற அடிப்படையிலே கேரள அரசோடு பேசி, பேச்சு வார்த்தை முடிந்ததற்குப் பிறகுதான் இந்தத் திட்டம் எடுத்துக் கொள்ளப்பட முடியும்.

திரு. இரா. தாமரைக்கனி: பேரவைத் தலைவரவர்களே, கேரள அரசு பம்பையாற்று நீரைப் பயன்படுத்தி ஓர் நீர் மின் விசைத் திட்டத்தை உருவாக்க பரிசீலனை செய்துகொண்டு இருப்பதாகச் சொல்கிறார்களே, உண்மையா?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது: பேரவைத் தலைவரவர்களே, கேரள அரசால் மேற்கொள்ளப்பட்டிருக்கும் பம்பையாற்றுத் திட்டம்பற்றித் தெளிவான ஒரு முடிவு தெரிய வேண்டுமென்று அரசு எதிர்பார்க்கிறது. அதற்குப் பிறகு இந்தத் திட்டத்தைப்பற்றி கேரள அரசோடு பேசுவதற்கு நல்ல வாய்ப்பு இருக்கிறது.

திரு. பி. துரைராஜ்: பேரவைத் தலைவரவர்களே, இந்தக் கீரியாற்றுத் திட்டம் பற்றி, 1967-ல் பேரறிஞர் அண்ணா அவர்கள் இருந்தபொழுது, இதைக் கேரள அரசுக்குக் கொண்டு வந்து, அவர்கள் அங்கே அந்த ஆற்றில் ஒரு அணை கட்டுவதாகவும், அணை கட்டி முடித்தவுடன் எவ்வளவு தண்ணீர் தமிழகத்திற்குக் கொடுக்க முடியும் என்பதைப் பரிசீலித்து அதை அனுமதிக்க வேண்டுமென்று அன்றைய தினம் கேரள அரசிடமிருந்து நமது தமிழக அரசுக்குப் பதில் வந்திருக்கிறது. ஆகையால், அதைத் தொடர்ந்து, முன்னால் கொடுத்த அரசின் வாக்குறுதியைத் தற்போதுள்ள அரசாங்கத்திடம் பரிந்து பேசி அதை மீண்டும் உடனடியாகக் கொண்டு வருவதற்கு அரசு முயற்சி யெடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது: தலைவரவர்களே, மத்திய அரசால் அமைக்கப்பட்ட வல்லுநர் குழுவால் ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படும் இரு மாநிலங்களுக்கு இடையேயும் எந்தவித உடன்படிக்கைக்கும் உட்படாத சில நதிகளிலே பம்பையாறும் ஒன்று. கீரியாறு என்பது பம்பையாற்றி னுடைய உப நதி. எனவே, பம்பையாற்றுத் திட்டத்திலே கேரள அரசு என்ன நடவடிக்கைகளை மேற்கொள்கிறது என்பதைப் பார்த்து, இரண்டு மாநிலங்களும் பேசி முடிவு செய்ய வேண்டிய விஷயம். பேச்சு வார்த்தை களுக்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு, பிறகுதான் நாம் இதைப்பற்றித் தீர்மானிக்க முடியும்.

1980 ஜூலை 23]

திரு. என். எஸ். வி. சித்தன் : பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கிரியாறு அணைத் திட்டம் உள்பட மேற்கு நோக்கிப் பாய்கின்ற அணைகள் சம்பந்தமாக ஏற்கெனவே கேரள மாநில அரசுடன் பேச்சு வார்த்தை தொடங்கி யிருப்பதாக மாண்புமிகு அமைச்சரவர்கள் சொன்னார்கள். மீண்டும் அந்தப் பேச்சு வார்த்தையைத் தொடங்க அரசாங்கம் ஏதாவது முயற்சி செய்திருக் கிறதா? அதற்காக, ஏதாவது தேதி நிர்ணயம் செய்யப்பட்டிருக்கிறதா? அப்படியில்லையென்றால், பேச்சு வார்த்தையை விரைவிலே தொடங்குவதற்கு அரசாங்கம் முயற்சி செய்யுமா?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது: பேரவைத் தலைவர் அவர்களே, விரைவிலே தொடங்குவதற்கு அரசாங்கம் முயற்சி செய்யும்.

நென்மேனி அணைத் திட்டம்

கு.கா.வி. எண் 39—திரு. ரா. கு. பெருமாள் : மாண்புமிகு நீர்ப்பாசனத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நென்மேனி அணைக்கட்டுத் திட்டம் (வைப்பாற்றின் குறுக்கே) பற்றி ஆய்வு செய்யப்பட்டதா?

(ஆ) ஆம் எனில், அதன் மதிப்பீடு எவ்வளவு?

(இ) எப்பொழுது ஆரம்பிக்கப்படும்?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : (அ), (ஆ) மற்றும் (இ) இராம நாதபுரம் மாவட்டத்தில் சாத்தூர் தாலுக்காவில் வைப்பாற்றின் குறுக்கே நென்மேனி, இருக்கங்குடி கிராமங்களுக்கருகே ரூ. 600 லட்சம் செலவில் நீர்த் தேக்கம் கட்டும் திட்டம் ஒன்று அரசின் பரிசீலனையில் உள்ளது.

திரு. ரா. கு. பெருமாள்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் திட்டத்திற்கு மாநில அரசே ஒப்புதல் அளிக்க முடியுமா அல்லது மத்திய அரசிடமிருந்து ஒப்புதல் பெற வேண்டுமா என்பதை அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது: தலைவர் அவர்களே, மாநில அரசே அதை எடுத்துச் செய்வதற்கு இப்பொழுது வாய்ப்பிருக்கிறது. எனவே தான் தலைமைப் பொறியாளர் ஆய்வு அறிக்கைத் தந்ததற்குப் பிறகு விவசாயத் துறை இயக்குநர், திருநெல்வேலி, இராமநாதபுரம் மாவட்ட ஆட்சி யாளர்கள், கால்நடைப் பராமரிப்புத் துறை இயக்குநர் ஆகியோருடைய